

**தலைவர் டியட்டர் எப். உக்டர்ப்**
பிரதான தலைமையில்
இரண்டாம் ஆலோசகர்

# அவரது மென்மையான கரங்களால் சூழப்பட்டு

பிற அநேகரைப் போல நானும் அடிக்கடி கலை மற்றும் இசையின் அழகிய திறன்களால் கவரப்பட்டிருக்கிறேன். அப்படிப் பட்ட ஒரு தருணம் தோட்டத்தில் வியாகுலம் 1 எனத் தலைப்பிடப்பட்ட டேனிஷ் ஓவியர் ப்ரான்ஸ் ஸ்வார்ஸால் உருவாக்கப்பட்ட சிறப்பான ஓவியத்தின் முன்பு நின்றபோது ஏற்பட்டது.

இந்த வேதனையைச் சித்தரிக்கும் அழகிய ஓவியம் கெத்சமனே தோட்டத்தில் இரட்சகர் முழங்கால் படியிட்டிருப்பதைக் குறிக்கிறது. அவர் ஜெபிக்கும்போது, ஆறுதல் அளித்து, பரலோக உதவியும் ஆதரவும் அளித்து, மென்மையான கரங்களால் அவரைத் தழுவி, ஒரு தூதன் அவரருகில் நிற்கிறான்.

இந்த ஓவியத்தைப் பற்றி நான் சிந்திக்க சிந்திக்க, சொல்லமுடியாத மென்மையான உணர்ச்சிகளாலும், நன்றியாலும் என் இருதயமும் மனமும் அதிகமாக பொங்குகின்றன. உலகத்தின் பாவங்களைத் தன்மேல் எடுத்துக்கொண்டு, உலகத்தில் தன் மாபெரும் உச்சகட்டப் பணியை இரட்சகர் தொடங்கும்போது இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதை சிறிது நான் உணர முடிகிறது. தன் பிள்ளைகள் மீது பிதாவின் எல்லையற்ற அன்பையும் மனதுருக்கத்தையும் பார்த்து நான் வியக்கிறேன். மனுக்குலம் முழுமைக்காகவும் எனக்காகவும் பாவமற்ற குமாரன் செய்த காரியத்துக்காக அதிகமான நன்றியுணர்வால் நான் பூரிப்படைகிறேன்.

### தேவ குமாரனின் தியாகம்

ஒவ்வொரு வருடமும் இந்த நேரத்தில் அனைத்து மனுக்குலத்துக்காகவும் இயேசுகிறிஸ்து செய்த தியாகத்தை நினைவுகூர்ந்து தியானிக்கிறோம்.

கெத்சமனேவிலிருந்து கொல்கதாவரை நமக்காக இரட்சகர் செய்தது, புரிந்துகொள்ளும் எனது திறமைக்கு அப்பாற்பட்டது. அவர் நமது பாவங்களின் பாரங்களைத் தன் மீது எடுத்துக் கொண்டு, ஆதாமின் முதல் மீறுதலுக்காக மட்டுமல்ல, ஆனால் என்றென்றும் வாழ்ந்த கோடிக் கோடியானவர்களின் பாவங்களுக்காகவும் மீறுதல்களுக்காகவும் ஒரு நித்தியமாய்க் கட்டுப்படுத்தும் விலைக்கிரயத்தைக் கொடுத்தார். இந்த மாபெரும் பரிசுத்த தியாகம், “எல்லோரையும் விடப் பெரியவரான, தேவனைக் கூட, வேதனையால் நடுங்கச் செய்து, ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் இரத்தம் கசியச் செய்து, சரீரத்திலும் ஆவியிலும் பாடுபடச்” செய்தது. (கோ.உ. 19:18).

அவர் எனக்காகப் பாடுபட்டார்.

அவர் உங்களுக்காகப் பாடுபட்டார்.

இந்த தியாகத்தின் விலையேறப்பெற்ற அர்த்தத்தைப் பற்றி நான் சிந்திக்கும்போது, என் ஆத்துமா நன்றியால் பொங்குகிறது. அவர்களுடைய அழுக்கு எவ்வளவு கறுப்பாயிருந்தாலும், அல்லது அவர்களது பாரம் எவ்வளவு அழுத்தினாலும், அவரது பரிசை ஏற்றுக்கொண்டு, தங்கள் இருதயங்களை அவரிடத்தில் திருப்புபவர்கள்

மன்னிக்கப்பட்டு, தங்கள் பாவங்களிலிருந்து கழுவப்படலாம் என அறிவது என்னை தாழ்மையடையச் செய்கிறது.

நாம் கறையற்றவர்களாக்கப்பட்டு மீண்டும் சுத்தமாகலாம். நமது நேச இரட்சகரின் நித்திய தியாகத்தால் நாம் மீட்கப்படலாம்.

### யார் நம்மைத் தேற்றுவார்?

நமது இரட்சகர் பாடுபட்ட அளவுக்கு நாம் யாரும் அனுபவிக்க மாட்டோம் என்றாலும், நம்மால் தாங்க முடியாததை விட நமது சோகமும் துயரமும் அதிகமாய்த் தோன்றுகிற சமயங்களில் ஆறுதலற்றவர்களாக நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த இருண்ட கசப்பான நேரங்களைச் சந்திப்போம். நமது பாவங்களின் பாரமும், மனவேதனையும் நம்மை இரக்கமின்றி அழுத்துகிற நேரங்கள் வரும்.

எனினும் அந்த நேரங்களில் நாம் நமது இருதயங்களை கர்த்தரை நோக்கி உயர்த்தினால், அவர் கண்டிப்பாக அறிந்து புரிந்து கொள்வார். தோட்டத்திலும் சிலுவையிலும் நமக்காக சுயநலமின்றி படுபட்ட அவர், இப்போது நம்மை விட மாட்டார். அவர் நம்மை பலப்படுத்தி, ஊக்குவித்து, ஆசீர்வதிப்பார். அவர் நம்மைத் தன் மென்மையான கரங்களால் சூழ்ந்து கொள்வார்.

அவர் நமக்கு ஒரு தூதனை விட சிறந்தவராக இருப்பார்.

அவர் நமக்கு ஆசீர்வதிக்கப்பட்ட ஆறுதலும், குணமாக்குதலும், நம்பிக்கையும், மன்னிப்பும் கொண்டுவருவார்.

ஏனெனில் அவர் நமது மீட்பர்.

நமது விடுவிக்கிறவர்.

நமது இரக்கமிக்க இரட்சகர், நமது ஆசீர்வதிக்கப்பட்ட தேவன்.

#### குறிப்பு

1. *ப்ரான்ஸ் ஸ்வார்ஸ் இறுதிச்சடங்கில் பேசிய போதகர் சொன்னார் “அவரது கலை தெய்வீகத்தால் அருளப்பட்டது,அநேக பிரசங்கங்களையும் விட தகுதி வாய்ந்தது போல் தெரிகிறது”* (Emmilie Buchanan-Whitlock, “History of Artists’ Lives Gives Greater Context for Exhibit,” *Deseret News,* Sept. 29, 2013, deseretnews.com).

---

### இச் செய்தியிலிருந்து கற்பித்தல்

நீங்கள் கற்பிப்பதற்கு முன் நீங்கள் கற்பிப்பவர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ ஆவியின் வழிநடத்தலை நாடவும். தலைவர் உக்டர்ப்பின் செய்தியிலிருந்து முக்கியமானவற்றைப் பகிர்ந்து கொள்ளும்போது, இரட்சகர் மற்றும் அவரது மீட்கும் பலி பற்றிய சாட்சியையும் கூறவும். நீங்கள் கற்பிப்பவர்களிடம், அவரது பாவநிவர்த்தி அவர்களுக்கு எப்படித் தோன்றுகிறது, மற்றும் தங்களது “இருண்ட, கசப்பான நேரங்களில்” கர்த்தரின் ஆறுதலை எப்படி உணர்ந்திருக்கிறார்கள் என்பது பற்றிக் கேட்பதைக் கருத்தில் கொள்ளவும்.

## இளைஞர்

### இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜெயம்

**பெயர் குறிப்பிடப்படவில்லை**

அதிகம் சாப்பிடும் பிரச்சினை எனக்கிருந்தது. நான் மேலும் மேலும் ஏராளமாய் விழுங்கியது குற்ற உணர்ச்சியிலும், விரக்தியிலும், ஏமாற்றத்திலும் முடிந்தது. அப்பிரச்சினயை மேற்கொள்ள நான் முயலும்போது மிகவும் பலவீனமாக உணர்ந்தேன்.

இரட்சகரின் பாவநிவர்த்தி நம்மை இரட்சிப்பது மட்டுமின்றி, நம்மை மீட்டு பரிபூரணப்படுத்துகிறது, மற்றும் அது எனது அதிகம் சாப்பிடும் ஆரோக்கியமற்ற பழக்கத்துக்கும் பொருந்தும் என்ற உண்மையை நெடுநாட்களாக நான் உதாசீனம் செய்தேன்.

நான் என்னை எனது இரட்சகரிடம் ஒப்புவிக்கத் தீர்மானித்தேன். நான் ஜெபித்தேன். எனது பலவீனத்தையும், கிருபை எனக்குத் தேவை என்பதையும் உருக்கமாக ஏற்றுக்கொண்டு, வரும் நாட்களில் அவரது தெய்வீக உதவியால் என்னை ஆசீர்வதிக்க வேண்டுமெனக் கேட்டேன். அந்த இரவில் அவர் தன் மகனுக்கு உதவ அளவற்ற வாஞ்சையையும், தம் சித்தத்தை நிறைவேற்ற கேள்வி கேட்க முடியாத அளவுக்கு வல்லமையையும் கொண்டிருக்கிறார் என அன்பான பிதாவின் உறுதிமொழியை உணர்ந்தேன்.

அந்த இரவிலிருந்து உணவு என் மீது அதிகமான தாக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. எனது வெற்றிக்கு இயேசு கிறிஸ்துதான் காரணம் என நான் அறிகிறேன். பவுலைப் போல, “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13), என நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். பவுலிடமிருந்து இன்னொரு பாடத்தை ஒருபோதும் மறக்காமலிருக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்: “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” (1 கொரிந்தியர் 15:57).

## பிள்ளைகள்

### இரட்சகர் உன்னைத் தேற்றுவார்

இரட்சகரால் அவன் அல்லது அவள் தேற்றப்பட்டதை உணர்ந்த சமயத்தைப் பற்றி ஒரு குடும்ப அங்கத்தினர் அல்லது நண்பரிடம் கேட்கவும். இரட்சகர் உங்களைத் தேற்றிய நேரத்தை நினைவுக்குக் கொண்டுவர முயலவும். அந்த அனுபவத்தை நீங்கள் படமாக வரைந்து, உங்களுக்கு தேறுதல் அளிக்க, இயேசு கிறிஸ்து எப்போதும் இருப்பார் என உங்களுக்கு நினைவூட்ட உங்கள் படுக்கையருகில் தொங்க விடவும்.

© 2015 by Intellectual Reserve, Inc. *எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/14. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/14. First Presidency Message, March 2015. மொழிபெயர்ப்பு* Tamil 12583 418

# இயேசு கிறிஸ்துவின் தன்மைகள்: நீடிய சாந்தமும் பொறுமையும்

**விசுவாசம், குடும்பம், ஒத்தாசை**

*இச்செய்தியை ஜெபத்துடன் படித்து, எதைப் பகிர்வது என அறிய நாடவும். இரட்சகரின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் புரிந்து கொள்வது, எப்படி உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கும், விசாரிப்புப் போதகத்தின் மூலம் நீங்கள் கண்காணிப்பவர்களை எப்படி ஆசீர்வதிக்கும்? அதிக தகவலுக்கு reliefsociety.lds.org பார்க்கவும்.*

இரட்சகரின் தன்மைகளை விளக்கும் விசாரிப்புப் போதகச் செய்திகளின் வரிசையில் இது ஒரு பகுதியாகும்.

பொறுமை எப்போதும் அமைதியான, செயல்பாடற்ற குணமாக எண்ணப்படுகிறது, ஆனால் பிரதான தலைமையில் இரண்டாம் ஆலோசகரான தலைவர் டியட்டர் எப். உக்டார்ப் சொன்னதுபோல, "பொறுமை செயல்பாடற்ற விலகுதல் அல்ல, அல்லது பயத்தினிமித்தம் செயல்படத் தவறுவதும் அல்ல. பொறுமை என்பது விழிப்புடன் காத்திருந்து, நிலைத்திருப்பது ஆகும். தாமதப்பட்டாலும் கூட, நமது இருதயத்தின் வாஞ்சைகள் ஒன்றுக்காக காத்திருத்தல் ஆகும். பொறுமை நிலைத்திருப்பது மட்டுமேஅல்ல; நன்றாக நிலைத்திருப்பதுமாகும்!"

நமது அநித்தியத்துக்கு முந்திய ஜீவியத்தில், அவரது ஆவி பிள்ளைகளாகிய நமக்காக ஒரு திட்டத்தை நமது பரலோக பிதா ஆயத்தம் செய்தார். பூமிக்கு வரும் சந்தர்ப்பத்துக்காக நாம் ஆனந்தத்தில் குதித்தோம் (யோபு 38:7 பார்க்கவும்). நமது பூலோக வாழ்வில் நமது விருப்பத்தை அவரது சித்தத்தோடு இணைக்கத் தெரிந்து கொள்ளும் போது, அவர் "அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்புக்குள்ளாக வர அவரது கரங்களில் நம்மைக் கருவியாக்குவார்" (ஆல்மா 17:11).

தலைவர் உக்டார்ப் தொடர்ந்து சொன்னார், "பொறுமை என்பது மாற்றமுடியாததை ஏற்றுக்கொண்டு, அதை தைரியத்துடனும், மென்மையாகவும், விசுவாசத்துடனும் எதிர்கொள்வதாகும். அதாவது, 'கர்த்தர் நம் மீது சுமத்துகிற சகல காரியங்களுக்கும் தன் தகப்பனுக்குக் கீழ்ப்படிகிற சிறு பிள்ளையைப் போல கீழ்ப்படிவதாகும்' (மோசியா 3:19). முடிவாக பொறுமை என்பது, அப்படிச் செய்வதற்குக் கடினமாக இருந்தாலும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நாளும் 'கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதில், உறுதியாகவும், திடமாகவும், அசைக்கப்பட முடியாமலுமிருப்பதாகும்' (1நெப்பி 2:10)"[1]

### கூடுதல் வசனங்கள்

*சங்கீதம் 40:1; கலாத்தியர் 5:22–23; 2 பேதுரு 1:6; ஆல்மா 17:11*

### வேதங்களிலிருந்து

நாம் நம்முடைய பூலோக வாழ்க்கையில், "வியாகுலங்களில் பொறுமையாக இருக்க வேண்டும், ஏனெனில் அவற்றில் அநேகம் அனுபவிப்போம்," என வேதம் நமக்குச் சொல்கிறது. பின்பு தேவன் நமக்குப் பின்வரும் வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார், "அவற்றைத் தாங்கிக் கொள், ஏனெனில் உன்னுடைய நாட்களின் முடிவு மட்டும் இதோ நான் உன்னோடு கூட இருக்கிறேன்" (கோ.உ. 24:8).

பின்வரும் வேதாகமக் கதை பொறுமை மற்றும் விசுவாசத்துக்கு ஒரு உதாரணம்.

"அப்பொழுது பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடுள்ளவளாயிருந்து... ஒரு ஸ்திரீ அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்று போயிற்று.

"அப்பொழுது இயேசு,... என்னைத் தொட்டது யார் என்று கேட்டார்: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்;

"அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லை என்று கண்டு, நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும், உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

"அவர் அவளைப் பார்த்து, மகளே, திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத் தோடே போ, என்றார்" (லூக்கா 8:43–48).

அவளைப் போல நாமும் இயேசு கிறிஸ்துவைக் கிட்டிச் சேரும்போது நாம் ஆசீர்வாதங்களையும் ஆறுதலையும், குணமாக்கலையும் கூட பெறலாம் அவரது பாவநிவர்த்தி நம்மைக் குணமாக்க முடியும்.

**குறிப்பு**

1. Dieter F. Uchtdorf, "Continue in Patience," *Liahona*, May 2010, 57, 59.

### *இதைக் கருத்தில் கொள்ளவும்*

**லூக்கா 8லுள்ள விவரத்தின்படி, அப்பெண்ணின் பல்லாண்டுப் பொறுமையும் பின்னர் இயேசு கிறிஸ்துவில் அவளது விசுவாசமும் எப்படிப் பலனளித்தது?**

© *2015* by Intellectual Reserve, Inc. *எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம் : 6/14.* மொழிபெயர்ப்பு அங்கீகாரம் *: 6/14. Visiting Teaching Message, March 2015.*மொழிபெயர்ப்பு Tamil *12583 418*